# <u>தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்</u>
# <u>சென்னை – 25</u>

## சுற்றறிக்கை 115879/R4/2021, நாள் 13.11.2021

<u>வணிகவியல் தேர்வர்களின் கவனத்திற்கு</u>

**பார்வை:** 28.10.2021 அன்று வெளியிடப்பட்ட திட்ட நிரல் கால அட்டவணை.

*********

பார்வையில் காணும் 28.10.2021 அன்று வெளியிடப்பட்ட திட்ட நிரல் அட்டவணையில் ஆகஸ்ட் 2021ல் நடைபெற வேண்டிய விடுபட்டத் தேர்வு டிசம்பர் 2021லும் மற்றும் 2022–ம் ஆண்டு பிப்ரவரி, ஆகஸ்ட் மாதங்களில் நடத்தப்பட வேண்டிய தேர்வுகளுக்கு ஏப்ரல் மற்றும் ஆகஸ்ட் மாதங்களிலும் தேர்வுகள் நடைபெறும் என வெளியிடப்பட்டது.

இந்த அட்டவணையில், 2021ம் ஆண்டு டிசம்பரில் தேர்வு நடத்துவதாக அறிவித்திருந்த திட்ட நிரல் குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர், தமிழ்நாடு தட்டெழுத்து – சுருக்கெழுத்து – கணினி பள்ளிகள் சங்கம், தென்னிந்திய தட்டெழுத்து மற்றும் கணினி பள்ளிகள் சங்கம், மதுரை மாவட்ட தட்டெழுத்து மற்றும் வணிகவியல் பள்ளிகள் நலச்சங்கம் மற்றும் திருச்சி, தமிழ்நாடு வணிகவியல் பயிலக சங்கம் ஆகிய சங்கங்களின் தலைவர்கள் அனுப்பியுள்ள கடிதங்களில் மாணாக்கர்களின் நலன் கருதி டிசம்பர் 2021 தேர்வுகளை ரத்து செய்து வழக்கம்போல் பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் தேர்வுகளை நடத்தும்படி கோரிக்கை வைத்துள்ளனர்.

மேலும், கடந்த இரு வாரங்களாக கனமழை காரணமாக மாணாக்கர்கள் முழுமையான பயிற்சியினை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாணாக்கர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 2021ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடத்தப்படவிருந்த தேர்வுகள் ரத்து செய்யப்பட்டு வழக்கம்போல் 2022ம் ஆண்டு பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் தேர்வுகள் நடைபெறும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அதற்கான திருத்திய திட்ட நிரல் அட்டவணை இத்துடன் வெளியிடப்படுகிறது. இக்கால அட்டவணைப்படி தேர்வுகள் நடத்தப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தலைவர், தேர்வு வாரியம்

## Government Technical Examinations in Commerce Subjects

## REVISED TENTATIVE PROGRAMME FOR 2022

| Sl. No. | Particulars | February 2022 | August 2022 |
|---|---|---|---|
| 1. | Publication of Notification inviting applications by Online | 19.12.2021 | 19.06.2022 |
| 2. | Availability of Online application through Portal (www.tndtegteonline.in) | 20.12.2021 | 20.06.2022 |
| 3. | Last date for applying of online application | 18.01.2022 | 15.07.2022 |
| 4. | Last date for submission of downloaded online application forms in person or by post to DoTE | 24.01.2022 | 20.07.2022 |
| 5. | Conduct of Government Technical Examinations:<br>(i) Shorthand High Speed | 05.02.2022<br>06.02.2022 | 06.08.2022<br>07.08.2022 |
| 6. | (ii) Shorthand Junior ,Intermediate, Senior | 12.02.2022<br>13.02.2022 | 20.08.2022<br>21.08.2022 |
| 7. | (iii) Accountancy Junior and Senior | 14.02.2022 | 22.08.2022 |
| 8. | (iv) Typewriting Junior, Senior and High Speed, (Pre-Junior – August only) | 19.02.2022<br>20.02.2022 | 27.08.2022<br>28.08.2022 |
| 9. | Date of Publication of Exam Results | 08.04.2022 | 21.10.2022 |
| 10. | Telephone Number | 044-22351014, 044-22351015<br>044-22351018 Extn. 356, 358 | |

**Note:.**

1. **The date of Notifications, Examinations, results are purely tentative. This is only for information to alert the candidates and typewriting Institutes to be prepared for the examinations.**

2. **Keep on watching this department website for latest Information, Notifications, circular- www.tndte.gov.in/site or www.tndtegteonline.in**

தலைவர், தேர்வு வாரியம்